# நன்றி நன்றி நல்ல  தேவனே

நன்றி நன்றி நல்ல  தேவனே
நன்மை புரியும் வல்ல தெய்வமே ( 2 )
ஏழு ஸ்வரங்களில் ஆ ஆ
இனிய ராகத்தால் லலா
ஏற்றிப் போற்றிப் புகழ்ந்து பாடுவேன்
நன்றி நன்றி நல்ல தேவனே
நன்மை புரியும் வல்ல தெய்வமே

**1**
உந்தன் கைகளில் எனது பெயரையே
உரிமையாகப் பொறித்து வைத்தீரே ( 2 )
முன்னும் பின்னுமே எங்கும் சூழ்ந்துமே
என்றும் என்னைப் பாதுகாத்தீரே ( 2 )
நன்றி நன்றி நல்ல தேவனே
நன்மை புரியும் வல்ல தெய்வமே

**2**
உந்தன் சிறகினில் என்னை சுமந்துமே
இறுகப் பற்றி அரவணைத்தீரே ( 2 )
எந்தன் திறமைகள் ஆற்றல் உணரச் செய்தீரே
நன்றி நன்றி நல்ல தேவனே
நன்மை புரியும் வல்ல தெய்வமே